செ. கு. எண்: 124 நாள் :3.11.2015

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 3.11.2015

மதுரை மாநகர், அரசு ராஜாஜி பொது மருத்துவமனை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. P.ராதாகிருஷ்ணன் அவர்கள் 30.7.2015 அன்று தல்லாக்குளம் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த வாகனம் மோதியதில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாநகரம், காட்டூர் போக்குவரத்துப் பிரிவு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. வி.முகமது கபீர் அவர்கள் 31.7.2015 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாநகரம், ராமநாதபுரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. A.துரைசாமி அவர்கள் 31.7.2015 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை, ஆவடி, தமிழ்நாடு சிறப்பு காவல் படை 15–ம் அணியில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. N.சதீஷ்குமார் அவர்கள் 3.8.2015 அன்று திண்டுக்கல் மாவட்டம், மூளையாறு அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு B.ரவிச்சந்திரன் அவர்கள் 7.9.2015 அன்று குடியாத்தம் தாலுகா, வெள்ளேரி கிராமம் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 10.9.2015 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், பொருளாதாரக் குற்றப் பிரிவு, அலகு எண் 2-ல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்த திரு A.தங்கபாண்டி அவர்கள் 12.9.2015 அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. லாசர் அவர்கள் 12.9.2015 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

திருவாரூர் மாவட்டம், பேரளம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு V. ராஜேந்திரன் அவர்கள் 14.9.2015 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், சோழவந்தான் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. மாரியப்பன் அவர்கள் உடல் நலக் குறைவால் 14.9.2015 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

கரூர் நகர காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு N.S.கதிரவன் அவர்கள் உடல் நலக் குறைவால் 15.9.2015 அன்று காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் ராஜேந்திரன், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் ராதாகிருஷ்ணன், முகமது கபீர், ரவிச்சந்திரன், தங்கபாண்டி, லாசர், மாரியப்பன், தலைமைக் காவலர் துரைசாமி மற்றும் முதல் நிலைக் காவலர் கதிரவன்; காவலர் சதீஷ்குமார் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**